## இருமொழிக் கொள்கை தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கு உதவும்!

# மொழிப் பிடிவாதத்தை ஒன்றிய அரசு கைவிட வேண்டும்!

## ‘தி இந்து’ நாளிதழ் தலையங்கம்!

சென்னை, ஆக. 12 -

மொழிப் பிடிவாதத்தை ஒன்றிய அரசு கைவிட வேண்டும் என்றும் இரு மொழிக் கொள்கை தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கு உதவும் என்றும் ‘தி இந்து’ ஆங்கில நாளேடு (11.08.2025 ) தலையங்கம் எழுதியுள்ளது.

பள்ளிக் கல்வியின் அடிப்படை தேவையை பூர்த்தி செய்வதில் இருந்து திசைத்திருப்பும் செயல் இந்தித் திணிப்பு முயற்சி என்று ‘தி இந்து’ ஆங்கில நாளிதழ் விமர்சித்துள்ளது. இரு மொழிக் கொள்கை தமிழ்நாட்டில் வளர்ச்சிக்கு ஊக்குவிக்கும் என்றும் அதற்கு எதிரான நிலைப் பாட்டை ஒன்றிய அரசு எடுப்பது சரியான முடிவல்ல என்றும் ‘தி இந்து’ மேலும் குறிப்பிட்டுள்ளது.

மொழிப் பாடம் என்ற தலைப்பில் ‘தி இந்து’ ஆங்கில நாளிதழ் வெளியிட்டுள்ள தலையங்கத்தில், தமிழ்நாட்டின் இரு மொழிக் கொள்கை பிடிப்பை தொடர்ந்து, கர்நாடகாவும் பள்ளிக் கல்வியில் இரு மொழிக் கொள்கையை அமல்படுத்த உள்ளது என குறிப்பிட்டுள்ளது.

தமிழ்நாட்டில் தமிழ் மற்றும் கர்நாடகாவில் கன்னட மொழியை கட்டாய மொழிப் பாடமாக அறிவித்துள்ள மாநில அரசுகள், ஒன்றிய பா.ஜ.க. அரசின் தேசியக் கல்விக் கொள்கைகளை ஏற்க போவதில்லை என தெரிவித்துள்ளன. அதற்கு மாற்றாக மாநிலக் கல்விக் கொள்கையை இரு மாநிலங்களும் சமீபத்தில் வெளியிட்டுள்ளன,

அதில் மாநில தாய் மொழிக்கு அதிக முக்கி யத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது என்றும் பாராட்டுத் தெரிவித்துள்ளது. தேசியக் கல்விக் கொள்கை மூலம் இந்தி மொழி திணிக்கப்படுவதாக தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்வைத்த குற்றச்சாட்டைச் குறிப்பிட்டுள்ள அந்த நாளிதழ், STEAM எனப்படும் அறிவியல், தொழில்நுட்பம், பொறியியல், கலை, கணிதத்தை தாண்டி, சமூக நீதி, காலநிலை மாற்றம், டிஜிட்டல் உள்ளிட்ட தற்போதைய முக்கிய தேவைகளையும் தமிழ் நாட்டின் மாநில கல்விக் கொள்கை உள்ளடக்கி யுள்ளதாக புகழாரம் சூட்டியுள்ளது.

பட்டியலின, பழங்குடி யின மாணவர்கள், முதல் தலைமுறை மாணவர்க ளின் கல்வியையும் தமிழ் நாடு அரசு ஊக்குவிக்கும் திட்டங்களை வைத்துள்ளது.

ஆங்கிலம் கற்க வேண்டும் என்ற தேவையை மும்மொழிக்கொள்கை குறைப்பதோடு, மகாராஷ்டிரா, குஜராத் மற்றும் இந்தி பேசும் மாநிலங்களில் உள்ள கல்வி நிறுவனங்களையும் பாதிக்கும் என்றும் ‘தி இந்து’ சாடியுள்ளது.

மாநிலக் கல்விக் கொள்கை தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கு முக்கிய காரணம், கர்நாடகாவிலும் பெரிய மாற்றத்தைக் கொண்டு வரும் என்றும், இதனை சீர்குலைக்கும் எந்த ஒரு நடவடிக்கையையும் ஒன்றிய அரசு கொண்டு வருவது தவறான நிலைப்பாடு.

கல்வி நிதியான 2 ஆயிரத்து 152 கோடி ரூபாயை ஒன்றிய அரசிடம் இருந்து பெற தமிழ்நாடு தொடர்ந்து போராடி வருகிறது என்றும், இந்தி உட்பட மற்ற மொழிகளை கற்பதில் எந்த தவறும் இல்லை, ஆனால், ஆதிக்கத்தினால் அதனை திட்டமிட்டு திணிப்பது ஏற்கத்தக்கதல்ல என்றும் அதன் தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஒன்றிய அரசு தனது மொழி பிடிவாதத்தை கை விட்டு பள்ளிக் கல்வியில் உள்ள மற்ற சவால்களை கவனிக்க வேண்டும், இதற்காக மாநில அரசுகளுடன் இணைந்து செயலாற்ற வேண்டும்.

இவ்வாறு ‘தி இந்து’ ஆங்கில நாளிதழ் தனது தலையங்கத்தில் குறிப்பிட்டுள்ளது.

---

## தமிழ்நாட்டில் மிதக்கும் சூரிய மின் உற்பத்தி நிலையங்கள் –

# காற்றாலை மின் உற்பத்தி நிலையம் அமைக்க நிதி ஒதுக்கப்படுமா?

## மாநிலங்களவையில் இரா.கிரிராஜன் கேள்வி!

புதுடெல்லி, ஆக.12 -

நாடளுமன்ற கூட்டத் தொடரில்,புதியமற்றும்புதுப்பிக்கத்தக்க எரிசக்தித் துறை அமைச்சரிடம், தமிழ்நாட்டில் மிதக்கும் சூரிய மின் உற்பத்தி நிலையங்கள் மற்றும் கடற்கரைக்கு அப்பால் காற்றாலை மின் உற்பத்தி நிலையங்களைஅமைப்பதற்குஏதேனும் நிதி உதவி வழங்கப்பட்டுள்ளதா? புதுப்பிக்கத்தக்க எரிசக்தி (RE) மின் உற்பத்தி நிலையங்களை நிறுவுவதில் அமைச்சகம் மற்றும் RECலிமிடெட்,PFCலிமிடெட் போன்றமின்நிதிநிறுவனங்கள் மூலம் வழங்கப்படும் மானியத்தின் விவரங்கள் என்ன? 2030 ஆம் ஆண்டுக்குள் 20 ஜிகாவாட் சூரிய ஆற்றல் இலக்கைஅடையதமிழ்நாட்டின்பல்வேறுபுதுப்பிக்கத்தக்க எரிசத்தி மூலங்களை பயன்படுத்த என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது? என்ற கேள்விகளை தி.மு.க. எம்.பி.



இரா.கிரிராஜன் எழுப்பியிருந்தார்.

இதற்கு பதில் அளித்துள்ள அந்தஅமைச்சகத்தின்இணை அமைச்சர் ஸ்ரீபாத் யேசோ நாயக், கடல் காற்றாலை திட்டங்களுக்கான செயல்திறன் இடைவெளி நிதி (VGF) திட்டத்திற்கு 2024ஆம் ஆண்டு ஜூன் 19ஆம் தேதி மத்திய அமைச்சரவைஒப்புதல்அளித்துள்ளதாகவும், அதன்படி ரூ. 7453 கோடி செலவில், ஒரு ஜிகாவாட் கடல் காற்றாலை திட்டங்களைநிறுவுவதற்கும், செயல்படுத்துவதற்கும் ரூ. 6853கோடிஒதுக்கீடுசெய்யப்பட்டுள்ளதாக கூறியுள்ளார்.

இதில் தமிழ்நாடு மற்றும் குஜராத் மாநிலங்களின்கடற்கரையில் தலா 500 மெகாவாட் ஆலை அமைக்கவும், கடல் காற்றாலை திட்டங்களுக்கான தளவாடத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காகஇரண்டுதுறைமுக ங்களை மேம்படுத்துவதற்கு ரூ. 600 கோடி மானியத்துடன் கூடிய திட்டத்தை செயல்படுத்துவதற்கான திட்டவழிகாட்டுதல்கள்2024 செப்டம்பர் 11ஆம் தேதி வெளியிடப்பட்டுள்ளதாகவும் இணை அமைச்சரின் பதிலில் கூறப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் எந்த ஒரு மிதக்கும்சூரியமின்உற்பத்தி நிலையத்தையும்புதியமற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சகம் அனுமதிக்கவில்லை என்றும், அதேசமயம், தமிழ்நாட்டில்ஒரு மிதக்கும் சூரிய மின்சக்தி திட்டத்தை செயல்படுத்துவதற்குஇந்தியபுதுப்பிக்கத்தக்க எரிசக்தி மேம்பாட்டு நிறுவனம்(IREDA)ரூ.95கோடிகடன் தொகை வழங்கியுள்ளதாகவும் குறிப்பிட்டு ள்ளார்.

புதுப்பிக்கத்தக்க எரிசக்தி திட்டங்களை செயல்படுத்துவதற்காக மின் நிதி நிறுவனங்கள் கடன்களை வழங்குகின்றனஎன்றும்இணைஅமைச்சர் பதிலில் கூறப்பட்டுள்ளது.

நாடு முழுவதும் புதுப்பிக்கத்தக்கஎரிசக்தியை ஊக்குவிப்பதற்காக ஒன்றிய அரசுசெயல்படுத்தும்திட்டங்கள், அதன்மூலம் கிடைக்கும் சலுகைகள் ஆகியவை குறித்தும்,புதுப்பிக்கத்தக்கஎரிசக்தி உற்பத்தியைப் பயன்படுத்த எடுக்கப்பட்டுள்ள முன்னோடியான நடவடிக்கைகள் குறித்தும் இணை அமைச்சர் பதிலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

# விளையாட்டுக் கட்டமைப்புக்காக ஒதுக்கிய திட்டங்கள் ‘பூஜ்ஜியம்’!

## மக்களவையில் – கே.இ.பிரகாஷ் கேள்விக்கு – ஒன்றிய அரசு பொறுப்பற்ற பதில்!

புதுடெல்லி, ஆக.12-

தேசிய விளையாட்டு மேம்பாட்டு நிதியின் (NSDF) கீழ், தமிழ்நாட்டின் ஈரோடு, திருப்பூர் மற்றும் நாமக்கல் ஆகிய மாவட்டங்களில் சிறிய விளையாட்டு மைதானங்கள் மற்றும் விளையாட்டு பயிற்சி மையங்கள் அமைக்க அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளதா என்று கேள்வி எழுப்பினேன். இதற்கு எந்தவொரு விளையாட்டு திட்டங்களும் அங்கீகரிக்கப்படவில்லை என்று மக்களவையில் ஒன்றிய விளையாட்டு மற்றும் இளைஞர் நலத்துறை



அமைச்சர் மன்சுக் மாண்டவியா பதிலளித்துள்ளார். இது தமிழ்நாட்டின் விளையாட்டு மேம்பாட்டை புறக்கணிக்கும் பதில்.

‘கேலோ இந்தியா’ மற்றும் ‘தேசிய விளையாட்டு மேம்பாட்டு நிதி’ போன்ற ஒன்றிய அரசின் திட்ட ங்களின் மூலம் நாடு முழுவதும் விளையாட்டு உள்கட்டமைப்பை மேம்படுத்துவதற்கு நிதி ஒதுக்க வேண்டியது ஒன்றிய அரசின் பொறுப்பு. ஆனால், இந்த நிதி ஒதுக்கீட்டில் ஒன்றிய அரசு பாரபட்சமாக நடந்து வருகிறது.

**‘கேலோ இந்தியா’வில் குறைந்தபட்ச நிதி ஒதுக்கீடு!**

‘கேலோ இந்தியா’ திட்டத்தின் கீழ், குஜராத் மற்றும் உத்தரப்பிரதேசம் போன்ற மாநிலங்களுக்கு பல நூறு கோடி ரூபாய் ஒதுக்கப்பட்ட நிலையில், தமிழ்நாட்டிற்கு மிக சொற்பமான நிதி மட்டுமே வழங்கப்பட்டுள்ளது. கடந்த 8 ஆண்டுகளில், குஜராத்துக்கு ரூ.605 கோடியும், உத்தரப்பிரதேசத்துக்கு ரூ.509 கோடியும் ஒதுக்கப்பட்டுள்ளது. ஆனால், தமிழ்நாட்டிற்கு வெறும் ரூ.29.5 கோடி மட்டுமே ஒதுக்கப்பட்டுள்ளது.

**கிடப்பில் தமிழ்நாட்டின் முன்மொழிவுகள்!**

தமிழ்நாட்டின் விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் (SDAT) பல முக்கிய திட்டங்களுக்கான முன்மொழிவுகளை ஒன்றிய அரசிடம் சமர்ப்பித்துள்ளது. அவற்றில் பெரும்பாலானவை அங்கீகரிக்கப்படாமல் கிடப்பில் போடப்பட்டுள்ளன. சில திட்டங்கள் மாநில அரசு தனது சொந்த நிதியில் செயல்படுத்தத் தொடங்கிய பின்னரே ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளன.

**வஞ்சிக்கப்படும் தமிழ்நாடு!**

சர்வதேச மற்றும் தேசிய அளவிலான பல்வேறு போட்டிகளை வெற்றிகரமாக நடத்தியுள்ள தமிழ்நாட்டிற்கு, விளையாட்டுத் துறையில் நிதி ஒதுக்கீடு செய்யாமல் வஞ்சிப்பது, தமிழ்நாட்டு விளையாட்டு வீரர்களுக்கும், வீராங்கனைகளுக்கும் இழைக்கும் மிகப் பெரிய அநீதியாகும்.

ஒன்றிய அரசின் இந்த பாரபட்சமான போக்கை நான் வன்மையாக கண்டிக்கிறேன். விளையாட்டுத் துறைக்கு நிதி ஒதுக்கீடு செய்வதில் அரசியல் காரணங்களைக் கைவிட்டு, அனைத்து மாநிலங்களுக்கும் சமமான வாய்ப்புகளை வழங்க வேண்டும்.

இவ்வாறு கே.இ.பிரகாஷ் வலியுறுத்தினார்.



திருவள்ளூர் தொகுதி திருவாலங்காட்டில் திருவாலங்காடு மற்றும் பழையனூர் ஊராட்சிகளுக்கான உங்களுடன் ஸ்டாலின் சிறப்பு திட்ட முகாமில் சட்டமன்ற உறுப்பினர் வி.ஜி. இராஜேந்திரன் பங்கேற்று பொதுமக்களிடமிருந்து பெறப்பட்ட கோரிக்கை மனுக்கள் மீது விரைந்து நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என துறை சார்ந்த அலுவலர்களிடத்தில் கேட்டுக்கொண்டார். இந்நிகழ்ச்சியில் திருத்தணி வட்டாட்சியர் மலர்விழி, வட்டார வளர்ச்சி அலுவலர்கள் ஜே. மாணிக்கம், பிரபாவதி, பல்வேறு துறை சார்ந்த அலுவலர்கள், கிழக்கு ஒன்றிய செயலாளர் எஸ். மகாலிங்கம், மாவட்ட விவசாய அணி அமைப்பாளர் களாம்பாக்கம் எம். பன்னீர்செல்வம், மாவட்ட வர்த்தக அணி அமைப்பாளர் வி. எஸ். நேதாஜி, மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் (சமூக வலைதளம்) ஆர். ராசா, ஒன்றிய கழக நிர்வாகிகள் ஜி. ரமேஷ், நீலாவதி சீனிவாசன், ஏ.பி. செந்தில்குமார், சி. செல்வம், ஜெய்சங்கர், டெய்லர் செல்வம், டானியல், தியாகராஜன், ஆர். குமார், சு. மணிகண்டன், கே. ஏழுமலை உள்ளிட்ட ஏராளமான கழக நிர்வாகிகள் பொதுமக்கள் பங்கேற்றனர் நிகழ்ச்சியில் பங்கேற்ற அனைவருக்கும் மதிய உணவு வழங்கப்பட்டது

---

# போதையில்லாத் தமிழ்நாடு அமைய வேண்டும்!

## முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவு!

**சென்னை, ஆக. 12 -**

**போதையில்லாத் தமிழ்நாடு அமைய வேண்டும் என்பதை வலியுறுத்தி முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பதிவிட்டுள்ளார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

தன்னிலை மறக்கச் செய்து - தன்மானத்தை இழக்கச் செய்து வாழ்வை நாசமாக்கும் போதை பொருட்களைத் தவிர்ப்போம் என மாணவச் சமுதாயம் எடுத்துள்ள உறுதிமொழியை, ஒவ்வொருவரும் கடைப்பிடித்திட வேண்டும்! போதையில்லாத் தமிழ்நாடு அமைய வேண்டும்!

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பதிவிட்டுள்ளார்.

---

## வாக்குரிமையை மதிப்பிழக்கச் செய்யும் தேர்தல் ஆணையத்தின் முயற்சியை ஏற்கமாட்டோம்!

# முறைகேடுகள் குறித்து சுதந்திரமான விசாரணை தேவை!

## கனிமொழி கருணாநிதி எம்.பி. சமூக வலைதளப் பதிவு!

**புதுடெல்லி, ஆக, 12 -**

**கர்நாடகாவின் மகாதேவபுரா சட்டமன்றத் தொகுதியில் அதிர்ச்சியூட்டும் வகையில் நடந்துள்ள வாக்காளர் பட்டியல் முறைகேட்டைக் கண்டித்து, நேற்று இந்தியா கூட்டணி நாடாளுமன்ற உறுப்பினர்கள், தேர்தல் ஆணையத்தை நோக்கி பேரணியாகச் சென்றனர்.**

இதுகுறித்து தனது சமூக வலைதளப் பக்கத்தில் பதிவிட்ட நாடாளுமன்ற கழகக் குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி,

“ மக்களின் வாக்குரிமையை மதிப்பிழக்கச் செய்யும் எவ்வித முயற்சியையும் ஜனநாயகத்தில் ஏற்றுக்கொள்ள முடியாது. முழு வெளிப்படைத்தன்மையுடன் வாக்காளர் பட்டியலை வெளியிட வேண்டுமென்றும், இம்முறைகேடுகள் குறித்து சுதந்திரமான முறையில் விசாரணை மேற்கொண்டு, தேர்தல் மீதான நம்பிக்கையை உறுதி செய்ய வேண்டுமென்றும் தேர்தல் ஆணையத்தை வலியுறுத்தினோம்” என்று குறிப்பிட்டுள்ளார்.



தென்காசி தெற்கு மாவட்டத்தில் உள்ள மாவட்ட கழக அலுவலகத்தில் மாவட்ட கழக செயலாளர் வே.ஜெயபாலன் தலைமையில் கடையநல்லூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட ஒன்றிய நகர பேரூர் கழகச் செயலாளர்கள் மற்றும் வழக்கறிஞர் அணி நிர்வாகிகள் ஆகியோர்களுடன் பாக முகவர்கள் கூட்டம் மற்றும் வாக்காளர் பட்டியல் சரி பார்க்கும் பணி குறித்து ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் வீடு வீடாக சென்று வாக்காளர் பட்டியல் சரி பார்ப்பின் முக்கியத்துவத்தை எடுத்துரைத்து கழக சட்டத்துறை இணை செயலாளர் கே.எஸ். இரவிச்சந்திரன் உரையாற்றினார். இதில் கடையநல்லூர் தொகுதி பார்வையாளர் நவ்ஷத், கழக சட்டத்துறை துணை செயலாளர் ராஜா முகமது, மாவட்ட கழக நிர்வாகிகள், தென்காசி தெற்கு மாவட்டக் கழக வழக்கறிஞர் அணி அமைப்பாளர் தங்கராஜ் பாண்டியன் மற்றும் வடக்கு மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் பிச்சையா ஆகியோர் முன்னிலையில் இக்கூட்டம் நடைபெற்றது.

---


கண்ணீர் அஞ்சலி



முன்னாள் துணை செயலாளர்
M.P.N.பழனிவேல் ராஜ்
அவர்களின் தந்தை

M.P.நடராஜன்

சென்னை வடகிழக்கு மாவட்டம், மாதவரம் தெற்கு பகுதி
29 வது வட்டகழகத்தின் அவைத்தலைவரும் – மாதவரம் முன்னாள்
கிராம சங்க தலைவரும், மாவட்ட பிரதிநிதி

அவர்கள் 10.08.2025 அன்று இரவு 10.30 மணியளவில் இயற்கை எய்தினார் என்பதை ஆழ்ந்த வருத்ததுடன் தெரிவித்து கொள்கிறோம் அன்னாரின் இறுதி ஊர்வலம் 11.08.2025 நேற்று மாலை 5.00 மணியளவில் வாசுதேவன் தோட்டம் பொன்னியம் மேடு, சென்னை – 110 அவரது இல்லத்தில் இருந்து புறப்பட்டு மாதவரம் இடுகாட்டி நல்லடக்கம் செய்யப்பட்டது

நீங்கா நினைவுகளுடன்

மாதவரம்.எஸ்.சுதர்சனம் MA.,BL.,MLA
மாவட்ட கழக செயலாளர்
சென்னை வடகிழக்கு மாவட்ட தி.மு.க